579

அனுப்புநர்
உறுப்பினர்–செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
1, காந்தி–இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்
முதன்மை தலைமை பொறியாளர்
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை
சென்னை – 600 003

---

**கடித எண். பிசி1/13432/2017** **தேதி 28.03.2018**

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – ஊக்கத்தளபரப்புடன கூடிய திட்ட அனுமதி – நில அளவை எண். 515/1, 515/2, 516 மற்றும் 517, மனப்பாக்கம் கிராமம், மனப்பாக்கம் மெயின் ரோடு, மனப்பாக்கம், சென்னை–ல், 3 பிளாக்குகள் கொண்ட தொகுப்பு குடியிருப்புக் கட்டிடம் பிளாக்கு A – அடித்தளம் பகுதி + வாகன நிறுத்து தளம் + 4 தளங்களுடன்கூடிய 188 குடியிருப்புகள் மற்றும் முதல் தளம் பகுதியில் அமைந்துள்ள உடற்பயிற்சிக்கூடம், பல்நோக்கு உபயோகத்திற்கானஅரங்கம், யோகா அறை, குழந்தைகள் காப்பகம் மற்றும் குடியிருப்போர் சங்கம் நான்காவது தளம் பகுதியில் நீச்சல்குளம், 2 பிளாக்குகள் கொண்ட வாகன நிறுத்து தளம் + 4 தளங்களுடன்கூடிய 28 குடியிருப்புகள் மொத்தம் 216 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்புக் கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிட பிரிவு எண். 664/2017, நாள் 15.09.2017 அன்று கிடைக்கப் பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண் 163, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 09.09.2009.
3. அரசாணை (பல்வகை) எண் 86, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 28.3.2012.
4. அரசாணை (பல்வகை) எண் 112, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 22.06.2017.
5. இந்திய விமான ஆணையத்தின் கடித எண் CHEN/South/B/ 080217/ 237056 நாள் 01.09.2017 பார்வை 5ல் கண்டுள்ள இந்திய விமான ஆணையத்தின் கடித எண் CHEN/South/B/ 072417/ 234409 நாள் 16.08.2017 மற்றும் CHEN/South/B/ 080217/ 237056 நாள் 01.09.2017 .
6. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து (மனைக்கான அனுமதி) விண்ணப்பதாரருக்கு அனுப்பிய இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 10.01.2018.
7. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 17.01.2018.
8. திறந்தவெளி இடத்திற்கான பகுதியினை தானப்பத்திரம் எண் 1313/2018 நாள் 05.2.2018 மூலமாக செ.பெ.வ.குழுமத்திற்கு ஒப்படைத்த நாள் 12.02.2018.
9. இணைப்பு சாலை இடத்திற்கான பகுதியினை தான பத்திர எண் 1312/2018 நாள் 05.2.2018 மூலமாக செ.பெ.வ. குழுமத்திற்கு ஒப்படைத்த நாள் 12.02.2018.
10. விண்ணப்பதாரரிடமிருந்து கட்டிட அனுமதிக்காக கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 16.02.2018.
11. வழிகாட்டி மதிப்பீடு கோருதல் குறித்து சார்பதிவாளர், தென்சென்னை அவர்களுக்கு இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 20.03.2018.
12. சார்பதிவாளர், தென்சென்னை அவர்களின் கடித நாள் 22.03.2018.
13. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு அனுப்பிய இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 23.03.2018.
14. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 27.03.2018.

****

ஊக்கத்தளபரப்புடன கூடிய திட்ட அனுமதி, நில அளவை எண். 515/1, 515/2, 516 மற்றும் 517, மனப்பாக்கம் கிராமம், மனப்பாக்கம் மெயின் ரோடு, மனப்பாக்கம், சென்னை–ல், 3 பிளாக்குகள் கொண்ட தொகுப்பு குடியிருப்புக் கட்டிடம் பிளாக்கு A – அடித்தளம் பகுதி + வாகன நிறுத்து தளம் + 4 தளங்களுடன்கூடிய 188 குடியிருப்புகள் மற்றும் முதல் தளம் பகுதியில் அமைந்துள்ள உடற்பயிற்சிக்கூடம், பல்நோக்கு உபயோகத்திற்கானஅரங்கம், யோகா அறை, குழந்தைகள் காப்பகம் ~~மற்றும்~~ குடியிருப்போர் சங்கம் நான்காவது தளம் பகுதியில் நீச்சல்குளம், 2 பிளாக்குகள் கொண்ட வாகன நிறுத்து தளம் + 4 தளங்களுடன்கூடிய 28 குடியிருப்புகள் மொத்தம் 216 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்புக் கட்டிடம் கட்டுவதற்கு பார்வை 1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–13ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை 6 மற்றும் 13–ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, ரசீது எண் B006424 நாள் 17.01.2018 மற்றும் ரசீது எண் B006944 நாள் 26.03.2018 –ல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்கள்.

| | ஏற்கனவே ,இதே கோப்பு எண்ணில் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார் | மீதமுள்ள கட்டணங்களை, ரசீது எண் B006944 நாள் 26.03.2018 படி கீழ்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளார் |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ.84,61,700 /– ரசீது எண்.B006424 நாள்.17.01.2018 | இல்லை |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ. 20,000 /– ரசீது எண். B006840 நாள்.07.03.2018 | ரூ.72,625 /– |
| வரன்முறைக் கட்டணம் | ரூ.14,10,280/– ரசீது எண். B006424 நாள்.17.01.2018 | இல்லை |
| திறந்தவெளிக் கட்டணம் | இல்லை | இல்லை |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்: | ---- | ரூ.65,00,000/– |
| கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | ---- | ரூ.2,29,000 /– |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | -- -- | ரூ.10,000/– |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | ---- | ரூ.80,19,220/– |
| ஊக்கத் தளப்பரப்பு கட்டணம் | ---- | ரூ.33,22,950/– |
| உறைவிடக் கட்டணம் | ---- | ரூ.60,14,420/– |
| மொத்தம் | | ரூ.2,41,68,215/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஒரு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து இருநூற்று பதினைந்து மட்டும்) |

பார்வை 6 மற்றும் 13–ல் கண்டுள்ள மனை ஒப்புதலுக்காக பெறப்பட்ட தொகை ஈடு செய்யப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

3. (அ) கழிவு நீரகற்று அமைப்பைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாக சமர்ப்பித்து உரிய அனுமதியை பெற்ற பின்தான், வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

(ஆ) குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியம் குடிக்கவும் சமையலுக்காகவும் மட்டும் நீர் வழங்க இயலும். வழங்கப்படும் நீரின் அளவும் ஒரு குடியிருப்பிற்கு அதிகபட்சமாக 5 பேருக்கும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவிற்குமே இருக்கும். வேறு உபயோகங்களுக்குத் தேவையான நீருக்காக கட்டிடம் கட்டுபவரே வேறு ஏற்பாடுகளை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெற்ற பிறகு, குடிநீர் இணைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும். அனைத்து கிணறுகளும், மேல் நிலைத்தொட்டிகளும் கழிவு நீர்த் தொட்டிகளும், கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதார முறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. பார்வை 5ல் கண்டுள்ள இந்திய விமான ஆணையத்தின் கடித எண் பார்வை 5ல் கண்டுள்ள இந்திய விமான ஆணையத்தின் கடித எண் CHEN/South/B/ 072417/ 234409 நாள் 16.08.2017 மற்றும் CHEN/South/B/ 080217/ 237056 நாள் 01.09.2017.ல் குறிப்புட்டுள்ள நிபந்தனைகளை விண்ணப்பதாரர் கடைபிடிக்க அறிவுறுத்துமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழை நீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரை படத்திலிருந்தும், வளர்ச்சி விதிமுறைகள் விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும், அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

6. எண் பி/சிறப்புக் கட்டிடம்/ 67 A to I /2018 நாள் 28.03.2018 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 28.03.2018ல் இருந்து 27.03.2023 வரை செல்லுபடியாகும்.

7. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் பெருநகர சென்னை மாநகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

8. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது பெருநகர சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருதியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

9. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையபத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

10. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

11. தமிழ்நாடு அரசு, அரசாணை எண் G.O.Ms.No.112, H&UD Dept. நாள் 22.6.2017–ல் கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) விதிகள் 2017–க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி மனை/கட்டிடம் விற்பவர் உத்தேசிக்கப்படவிருக்கும் மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டிற்கு விளம்பரம் செய்யவோ விற்பனை செய்யவோ முன்பதிவு செய்யவோ, விற்கவோ (அ) விலை அறிவிப்பு செய்யவோ மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டுகளை வாங்குபவர்களுக்கு அழைப்பு விடுக்கவோ எதுவாக இருந்தாலும், அக்கட்டிட, மனை விற்பனை திட்டத்தை தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்த பிறகே, செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இந்த திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது.

12. கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது:

i. நீச்சல் குளத்தின் கட்டுமானப் பணி தொடங்கும் முன்பாக அதற்கான உத்தரவை செயல் குழுமத்திடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெற்று அதனை பணிநிறைவு சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும்போது சமர்பிக்க வேண்டும்.

ii. நீச்சல் குளத்தை பயன் படுத்துவதற்கு முன்பாக இதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியிடமிருந்து தடையின்மைச் சான்றிதழை பெறவேண்டும்.

iii. நீச்சல் குளத்திற்கான அரசானை எண். 97, MAWS துறை, நாள் 07.07.2015ல் கண்டுள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

iv. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் தடையின்மைச் சான்றிதழை கட்டுமான பணி தொடங்குவதற்கு முன் பெற்று அதனை பணிநிறைவு சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும்போது சமர்பிக்க வேண்டும்.

v. பதிவு செய்யப்பட்ட தொழில் சார்ந்த வல்லுநரிடம் பெறப்பட்ட போதுமான வடிவமைப்பு சான்றிதழின்படி மேல்நோக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பு கட்டப்பட வேண்டும். மேலும் இந்த கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பை கட்டிட முனைவரே மேற்கொள்ள வேண்டும்.

vi. பார்வை 5ல் கண்டுள்ள இந்திய விமான ஆணையத்தின் கடித எண் CHEN/South/B/ 072417/ 234409 நாள் 16.08.2017 மற்றும் CHEN/South/B/ 080217/ 237056 நாள் 01.09.2017.ல் குறிப்புட்டுள்ள நிபந்தனைகளை விண்ணப்பதாரர் கடைபிடிக்க வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள,

28/3/2018

O/C

உறுப்பினர்–செயலருக்காக.

இணைப்பு:

28/3/18 28/3/18

1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:

1. திருவாளர்கள். காசா கிராண்ட் சிவில் எஞ்சீனியரிங் பி லிட்.
   திருவாளர்கள் கேலண்ட் பிரமோட்டர்ஸ் LLP
   எண். 111/59, NPL தேவி,
   LB ரோடு, திருவாண்மியூர்
   சென்னை– 600 041.
2. உறுப்பினர், உரியதுறை (Appropriate Authority)
   108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
3. வருமானவரி ஆணையர், 168, உத்தமர் காந்தி சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
4. துணைதிட்ட அமைப்பாளர், செயலாக்கப்பிரிவு (மத்திய பிரிவு),
   செ.பெ.வ.குழுமம், சென்னை–8.
5. மேலாண்மை இயக்குநர், செ.பெ.குடிநீர் மற்றும் கழிவுநீர்
   அகற்றும் வாரியம், சென்னை 600 002.